முருகப்பெருமான் துணை

**மகான் திருக்குறிப்புத்தொண்டர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.07.2022, சனிக்கிழமை

1. அருள் தரும் ஞான குருவாய்
ஆறுமுகனார் சூட்சும வடிவாய்
இருள் போக்கும் சரவணச்சுடராய்
ஏகாந்த நிலையாய் வந்த ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட சுபகிருது நள்ளி திங்கள்
இயம்பிட முன்னான்கீர் திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 14 நாள், 30.07.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் அருளாசி தன்னை
வழங்குவேன் திருக்குறிப்புத்தொண்டர் யானும்
சோரமிலா ஞான உலகம் அமைய
சுத்தநெறி கொண்டு மக்கள் வர
4. வருகவே வழிகாட்டி அருளும்
வாழும் ஞானி அரங்கன்
தரும வழிகளுடன் சன்மார்க்க
தயவு நெறியை ஏற்றுவர
5. ஏற்றுவர மக்களிடை தானும்
இயல்புநிலை தயவு கூடி
ஆற்றல்பட ஞான வாழ்வாய்
அனைவரும் சமம் எனும் நிலை
6. நிலைகூடி பேதம் கருதா
ஞானவான்களாய் மாற்றம்
காலமதில் கூடி பேருலகம்
கண்டடையும் சமத்துவ சமதர்ம
7. சமதர்ம ஆட்சிக் காலமாக
சகலருக்கும் பயன்கிட்டும்படி
சமதர்ம ஆளுமை பெருகி
சத்திய ஞானயுக மாற்றம் காணும்
8. காணவே கலியினை மாற்றும்
கருணை வடிவாக வந்த
ஞானதேசிகன் கருணைபார்வை
நயன தீட்சையாகப் பெற்ற மக்களுக்கு
9. மக்களுக்கு மரணம் வெல்லும்
மகத்துவமும் சக்தியும் கூடி
தேக்கமிலா வரமும் சித்தியும்
தெய்வ அனுகூலமும் பெருகும்

10. பெருகவே தீவினை ஏதுமிலா
பேருலகம் நல்லோர்கள் தயவும்
முருகப்பெருமான் தலைமையை
முழுமைபட ஏற்ற காலமாகி

11. ஆகவே மாற்றம் கண்டு
அனைத்து பாதுகாப்புமிக்க
யுகமாற்றமே நடந்தேறக் கூடும்
உரைத்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–